அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 01/2014(II)

எனது இல. EST-2/POLICY/03/0798-I
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.

2016.01.14

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

## அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இன் 2 ஆம் பந்தி மற்றும் 2014.09.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014(I) தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அவ் ஏற்பாடுகளுக்கமைய அடுத்துள்ள அரச கருமமொழிகளின் தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தினுள் குறித்த அலுவலர்களுக்கு மேற்படி சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளுக்கு உரிய அடுத்துள்ள அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு போதிய சந்தர்ப்பம் கிடைக்காமையினால், அது தொடர்பாக 2012.06.30 ஆந் திகதி வரை அரசாங்க / மாகாண அரசாங்க சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் 2018.12.31 வரை சலுகைக் காலம் வழங்குவதற்கு 2015.12.16 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அச்சலுகைக் காலம் தொடர்பாக குறித்த அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்./ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு